RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt2214

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

கற்பெனப்படுவது சொல் திறம்பாமை - வல்லாளமகாராஜன் கதையை முன்வைத்து

கி. லதா [அ, *], ந. சண்முகவடிவு [அ]

[அ] தமிழ் முதுகலை மற்றும் உயராய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்-641018, தமிழ்நாடு, இந்தியா.

Chastity is being true to one's word - Presenting the story of Vallalamakarajan

K. Latha [a, *], N. Shanmugavadivu [a]

[a] PG and Research Department of Tamil, Government Arts College (Autonomous), Coimbatore-641018, Tamil Nadu, India.

* Corresponding Author:
lathaphd2021@gmail.com

Received: 11-08-2021
Revised: 13-10-2021
Accepted: 28-10-2021
Published: 06-12-2021

ABSTRACT

Devotional literature is not merely a literary work, but also an act of uplifting moral life and the religious beliefs of the people. When we look at devotional literature and religious thoughts, these are the best. Thus, in advancing the position of chastity, the story of Vallalamakarajan in Arunachala Purana confirms the singularity of the word efficiency while advancing the position of chastity. Chastity is here irrespective of male or female. It also breaks down the barriers of lower classes and the upper classes. If a word is to have its meaning, it is appropriate to combine the time frame in which it is spoken and the social setting. The word chastity presents us in a particularly significant position. It very well may be seen that the term has been utilized in the feeling of peculiarities since the hour of Sangam to the later to the later moral literary works

Keywords: Chastity, Moral, Opposites, Social context.

முன்னுரை

இலக்கியம் என்பது ஒற்றைத்தன்மையை உட்கொண்டதல்ல. பாரிய நிலையில் பன்முகத்தன்மையையும், சித்தாந்தங்களையும் ஊடுபாவாகக் கொண்டவை. எந்த ஒரு இலக்கியமும் சமூகத்திற்கான களத்தில் நின்றே தன்னைப் புனைவுக்கு உட்படுத்திக் கொள்கிறது. எதார்த்தவகையில் அல்லாத மிகைப்புனைவியல் தன்மையிலும் இவற்றை ஒருங்கே நாம் காணமுடியும். தொன்மம், புராணம் போன்ற பழமைக் கூறுகளைத் தாங்கி இலக்கியம் புனைவுக்கு உட்படுத்தப்பட்டாலும் சமூகம் என்ற நிலைக்களன் அங்கு செயலாற்றிக் கொண்டே இருக்கின்றது. ஒரு காலத்திய சமூகக் கோட்பாடுகள் அல்லது சித்தாந்தங்கள் பின்னொரு காலத்தில் மாற்றத்தை எதிர் கொள்கின்றன என்பது நிதர்சனமான உண்மை. அவ்வகையில் கற்பு என்பதையும் நாம் உள்வாங்கிக் கொள்ள இயலும். அத்தகையதொரு ஓர்மையுடனே வல்லாளமகாராஜனின் இரண்டாம் மனைவியான சல்லம்மா தேவியின் புனைவினையும் நாம் பார்க்க இயலும்.

வல்லாள மகாராஜன் கதை

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் அருணாசல ஈசுவரரின் புராணத்தைக்

கூறுமுகமாக அமைந்தது அருணாசல புராணம். புராணம் என்பதற்கு பழமை வாய்ந்தது, தொன்மை வாய்ந்தது என்று பொருள் கொள்ளலாம் (இரத்தினக்குமார், 2014). புராணங்கள் பலதிறப்பட்டன. எனினும் அவற்றில் தல புராணங்களே சிறப்பிடம் பெறுகின்றன. தமிழில் புராணங்கள் என்றாலே தலபுராணங்கள் என்று சொல்லும் அளவுக்கு தலபுராணங்கள் சிறப்புப் பெற்றிருக்கின்றன. தலபுராணங்கள் பொதுவாக இறைவன், தலம், தீர்த்தம், விருட்சம் என்னும் அமைப்பில் இருக்கும் என்கிறது வாழ்வியல் களஞ்சியம். மேலும், "மக்கள் பிறப்பின் நோக்கமும் அப்பிறப்பிலிருந்து விடுபடும் தன்மையும் முத்திபெற வேண்டிய வழிமுறைகளும், புராணங்கள் வழியாக எடுத்துரைக்/கப்பட்டுள்ளன. இதில் ஆலய வழிபாடும், புண்ணியத் தளங்களில் இருத்தலும், புராணங்களைக் கேட்பதும் பிறவியினின்று உய்யும் தன்மைகளாகக் கருதப்படுகின்றன" என்று தலபுராணத்தின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார் முனைவர் க. இரத்தினக்குமார் (Rathanakumar, 2014).

அத்தகையதொரு தலபுராணமாகவும், பல தொன்மக் கதையாடல்களை உட்கொண்டுள்ளதாகவும் அமைந்தது அருணாசல புராணம் ஆகும். சிவபெருமான் கோவில் கொண்டுள்ள சிறப்புமிக்க 1008 திருத்தளங்களிலும் மேம்பட்ட தன்மையுடையவை திருவாரூர், சிதம்பரம், காசி, திருவண்ணாமலை என்ற நான்காகும். இதில் நினைக்க முக்தியினைத் தருவதாக அமைவதும், பஞ்சபூதத்தலங்களுள் ஒன்றாகவும், ஆறாதாரத் தலங்களுள் ஒன்றாகவும் அமைவது திருவண்ணாமலையின் சிறப்பு. வேதங்களாலும், ஆகமங்களாலும், பதினெண் புராணங்கள் மற்றும் தேவார திருவாசங்களானும் போற்றப்படும் பேறினை உடையது திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் அருணாச்சலேசுவரின் மகிமை (Kalyanasundaram, 2017). இப்புராணத்தை சைவ - எல்லப்ப நாவலரென்னும் புலவர் இயற்றினார். இந்நூலுக்குப் பலர் உரையெழுதியுள்ளனர்.

அருணாசலபுராணம் பாயிரம் தொடங்கி 14 சருக்கங்களை உள்ளடக்கியது. இதில் 7வது சருக்கமாக அமைவது வல்லாளமகாராஜன் சருக்கம். அருணையம் பதியை வல்லாளமகாராஜன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு எல்லம்மா தேவி, சல்லம்மா தேவி என்னும் இரு மனைவியர்கள் இருந்தனர். நீதிவழுவாது, செங்கோண்மை தவறாது நாட்டை ஆண்டு வருகின்றான். ஆனால் தனக்குப் புத்திரப்பேறு இல்லையே என்னும் வருத்தம் மிகுதியால் தன் மந்திரிகளுடன் ஆலோசித்து அவர்கள் கூறிய ஆலோசனையின்படி வேண்டுபவர்களுக்கு வேண்டுவனவற்றை அளிக்கும் வண்ணம் 32 அறங்களையும் செய்துவருகின்றான். இதனைக் கேள்வியுற்ற நாரதர் தாமே கண்டு சென்று வல்லாளமகாராஜனின் பெருமையை சிவபெருமானிடம் சொல்ல, அவரும் அரசனை சோதிக்க எண்ணுகிறார். அருணையம் பதியில் இருக்கும் கணிகையர் இல்லம்தோறும் இரவு முழுவதும் தங்க சங்கமர்களை ஏவுகிறார். பின்னர் தானும் சங்கமரின் வேடம் பூண்டு வல்லாளமகாராஜன் அரண்மனையை வந்தடைகிறார். அங்கு அரசன் சங்கமரின் விருப்பம் கேட்க தனக்கு ஒரு கணிகை வேண்டும் என்று சங்கமரின் உருவில் இருக்கும் சிவபெருமான் மொழிகிறார்.

சங்கமரின் விருப்பத்தை ஏற்று படைவீரர்களை கணிகையர் வீதி சென்று அழகிய கணிகை ஒருத்தியை அழைத்துவருமாறு ஆணையிடுகிறார். அவர்களும் சென்று கணிகையர் வீதியில் அழைக்க அவர்கள் இன்று இரவு முழுமையும் தங்களை நாடிவந்த அடியவர்களை மகிழ்விப்பதற்காக நாங்கள் பொன்னைப் பெற்றோம். பொன்னைப் பெற்றபின் வாக்குப் பிழையோம் என்று சொல்லி மறுத்து விடுகின்றனர். நடந்ததை மன்னனிடம் கூற மந்திரிகள் சென்று மிகுந்த செல்வம் தருவதாகக் கூறி கணிகையர்களை அழைக்கின்றனர். அப்போதும் அவர்கள் மறுக்க இறுதியில் மன்னனே சென்று அழைக்கின்றான். அப்போதும் வாக்குப் பிழையோம் எனச்சொல்லி அவர்கள் மறுக்கின்றனர்.

சங்கமரின் காம நோயால் உண்டான துன்பத்தைத் தீர்க்க இயலாமல் போனதே என்று மன்னன் வருந்துகிறான். அதனைக் கண்ணுற்ற மன்னரின் இளைய மனைவி சல்லம்மா தேவி தானே சங்கமரின் வருத்தம் தீர்க்கச் செல்வதாகக் கூறுகிறாள். மன்னனும் மகிழ்ச்சியோடு சங்கமரிடம் அவர் கேட்ட பொருள் கிடைத்தது என்று சொல்லி அவரின் வேண்டுதலை நிறைவேற்ற முனைகிறான். சல்லம்மாதேவியும் சங்கமர் இருக்கும் இடம்சென்று நிட்டையில் இருக்கும் அவரை எழுப்பமுயல இறைவன் குழந்தையாக உருக்கொள்கிறார். குழந்தையின் அழுகுரல் கேட்டு அவ்விடம் வந்த வல்லாள மகாராஜன் அள்ளி அணைத்து அக்குழந்தையின் நலன் பாராட்டி இறைவனின் திருவிளையாடலை உணர்ந்து மகிழ்ந்திருக்கும் வேளையில் குழந்தை மாயமாய் மறைகிறது.

வருத்தமுற்ற வல்லாளமகாரனுக்கு வான்குரலாகத் தோன்றி இறைவன் தாமே உமக்கு பிள்ளையாக வந்த காரணத்தினால் உனக்கான அந்திமக் காரியங்களைத் தானே செய்வதாக உரைத்து மறைகிறார். அதன்பின் பலகாலம் சிறப்போடு அரசாண்டதாக கதை அமைகிறது. இக்கதையில் நேரிடைப் பொருண்மை பக்தியாக இருப்பினும், வாக்குத் தவறுதல் மிகப்பெரிய பாவம், குற்றம் என்று எண்ணும் குறிப்பிட்ட காலத்திய சமூகச் சூழலை இக்கதை உட்கிடைப்பொருளாகக் கொண்டுள்ளது.

கற்பு

சொல் என்பது வெறும் எழுத்துக்களின் கூட்டிணைவு அல்ல. சமூக மதிப்பில் அதற்கு வலுவானதொரு இடம் உண்டு. அவை காலத்திற்குக் காலம் சமூகச் சூழலுக்கு ஏற்ப மாற்றத்தை உட்கொண்டு வருகின்றன என்பது அறிந்த ஒன்றே. ஒரு சொல்லை அதன் பொருண்மையை உட்கொள்ள வேண்டுமென்றால் அது புழங்கிய காலத்தினையும், சமூகச் சூழலையும் ஒன்றிணைத்துக் காண்பதே பொருத்தமுடையதாக அமையும். அத்தகையதொரு பொருள் நிலைப்பாட்டையே கற்பு என்ற சொல்லும் நம்முன் வைக்கிறது.

'அறம், ஒழுக்கம், கற்பு போன்ற சொற்கள் சமூக விழுமியங்கள் கொண்டவை. அவை அது புழங்கும் சமூகத்தின் காலத்தோடும், சூழலோடும் புரிந்துகொள்ளத் தக்கவை. ஒரு காலத்திய பொருண்மையே பின்னரும் அவை கொண்டிருக்கும் என்று எண்ணத் தேவையில்லை' அறம், ஒழுக்கம் போன்ற சொற்கள் முன்னைய மதிப்பீடுகளைத் தாண்டி எங்ஙனம் பிற்காலத்தில் மாறுதல் அடைந்ததோ, அத்தகையதொரு மதிப்பீட்டு நிலையிலேயே கற்பு என்னும் விழுமியத்தின் மதிப்பீடும் காலத்திற்குக் காலம் மாற்றம் கொண்டுள்ளது என்பதை உணரமுடிகிறது (Jeyamohan, 2012).

கற்பு என்ற சொல் பழங்காலத்தில் "பாலியல் ஒழுக்கம்" என்னும் பொருண்மையில் கையாளப்படவில்லை. சங்க இலக்கியம் வேதத்தை "எழுதாக் கற்பு" என்ற பொருளிலேயே பேசுகின்றது (Nagarajan, 2004). இங்கு கற்பு என்பது கல்வி என்னும் பொருளிலேயே அமைந்துள்ளது. அதுபோன்றே சம்பந்தரும்,

"அமண் சமணர் கற்பழிக்க திருவுளமே"

என்று குறிப்பிடுகின்றார் (Thirugnanasambandar, 2011).

தொல்காப்பியத்தில் கற்பு என்ற சொல் திருமணத்திற்குப் பின்னையதான மரபுகளை உணர்த்துவதற்குக் கூறப்பட்டதாகும். இதனை,

"கற்பு எனப்படுவது கரணமொடு புணர

கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியை

கொடைக்கு உரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

என்று கற்பியலின் முதல் நூற்பாவிலேயே குறிப்பிடுகின்றார் (நச்சினார்க்கினியர், 1970). இதற்கு உரை கூறவந்த நச்சினார்கினியர் "வரைதலின் பின் இன்னவாறு ஒழுகுதல் வேண்டும் என இருமுதுக்குரவரால் கற்பித்தலின் கற்பாயிற்று" எனக் கூறுகின்றார் (Nachinarkiniyar, 1970).

சங்க இலக்கியத்தில் கற்பு என்ற சொல் 44 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றின் பொருண்மையை ஒட்டுமொத்தமாகப் பார்ப்பின் கற்றல், தலைவன் சொல் கேட்டல், தெய்வத்தன்மையான நிலைப்பாடு என பல சூழல்பொருண்மையை முன்வைக்கின்றன. சான்றாக,

"வெளிறுஇல் கற்பின் கண்டுஅமர் அடுதொறும்" (அகம் - 106)

என்று கற்பு என்பது கற்றல் பொருளிலும்,

"மாசுஇல் கற்பின் மடவோள் குழவி" (நற்றிணை -15)

எனத் தலைவன் சொல் கேட்டல் என்னும் பொருளிலும்,

"கடவுள் கற்பின் மடவோள் கூற" (அகம் - 314)

எனத் தெய்வத்தன்மை சுட்டும் பொருண்மையிலும் இடம்பெறுவதைக் காணமுடிகிறது (செயபால், 2004).

கற்பு என்பது சொற்பிழையாமை என்னும் பொருண்மையிலும் சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இகல்அடு கற்பின் மிஞிலியொடு தாக்கி" (அகம் - 396)

என்னும் அகநானூற்றுப் பாடலில் நன்னன் என்னும் மன்னன் புன்னாடு என்னும் ஊரைச் சினந்து எழுந்தான் (Jeyabal, 2004). இதனை அறிந்த ஆய் எயினன் என்பான் அம்மக்களிடத்தே பாழி என்ற நகரிடத்தே எழுந்துநின்று அஞ்சாதீர்! என்று சொன்னான். தான் கூறிய சொற்பிழையாது நன்னனின் நண்பனாகிய மிஞிலி என்பானோடு போரிட்டு உயிர்துறந்தான் என இங்கு சொற்பிழையாமையை உணர்த்தவே கற்பு என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பொருளிலேயே ஔவையும்,

"கற்பெனப்படுவது சொல் திறம்பாமை" (கொன்றைவேந்தன்)

எனச் சுட்டுகின்றார் (Avvaiyar, 2017). இங்கு கற்பு என்னும் சொல் "சொற்பிழையாமை" என்பதையே நோக்கமாகக் கொண்டு செயலாற்றுகின்றது. இங்கு பால்பேதம் முதன்மையில்லை என்பது நோக்கத்தக்கது. இத்தகு பொருண்மையிலேயே அருணாசல புராணத்தில் இடம்பெறும் வல்லாளமகாராஜன் கதையில் தான் சொன்ன சொல்லுக்காகவே தன் மனைவி சல்லம்மாதேவியை இறைவனுக்கு அளிக்க முன்வந்தார் என உள்வாங்குதலே சாலச் சிறந்தது.

வல்லாளமகாராஜனின் சொல் திறம்பாமையே கற்பாதல்

மனித வாழ்க்கையை உயர்நிலை நோக்கிக் கடத்த முயல்வன பக்தி இலக்கியங்கள் எனலாம். இவை வெறும் இலக்கியப் பனுவலாக மட்டுமே அல்லாமல் அறம் சார்ந்த வாழ்வியலை, மக்களின் சமய நம்பிக்கையை மேட்டிமைப்படுத்தும் செயலையும் செய்கின்றன எனலாம். இவை தோன்றிய காலத்தின் அறங்களையும், என்றென்றைக்குமான சமூக அறங்களையும் போற்றி நிற்கின்றன. பக்தி இலக்கியங்களை சமயக் கோட்பாடுகளை முன்வைத்து நோக்கும் போது இத்தகு புரிதல்களே சாலச்சிறந்தது. அவ்வகையில் கற்பு என்னும் நிலைப்பாட்டை முன்னெடுக்கும் போது அருணாசல புராணத்தில் இடம்பெறும் வல்லாளமகாராஜன் கதையும் சொல் திறம்பாமை என்ற ஒற்றைப் பொருண்மையே உறுதிப்படுத்துகிறது எனலாம். கற்பு என்பது இங்கு ஆண், பெண் பேதமற்றது. அதுமட்டுமல்ல மேலோர் கீழோர், உயர்ந்தோர் தாழ்ந்தவர் என்னும் எதிரிணைகளையும் உடைத்துச் செல்கின்றது.

சொல்திறம்பாமை என்பது இக்கதையில் மூன்றுவித அடுக்குகளில் செயல்படுகிறது.

1. அரசனின் சொல்திறம்பாமை
2. கணிகையரின் சொல்திறம்பாமை
3. கணவனின் சொல் திறம்பாமையைக் காத்தல்

என்ற மூன்று அடுக்குகளும் ஒன்றன் தொடர்ச்சியாய் மற்றொன்று செயலாற்றுகின்றதெனினும் உயர்ந்த கற்பு என்னும் நிலைப்பாட்டை சல்லம்மாதேவியின் பண்பு இங்கு முன்வைக்கிறது.

அரசனின் சொல்திறம்பாமை

பிள்ளைப் பேறின்மையால் அதனை வேண்டி வல்லாளமகராஜன் 32 அறங்களையும் முறையாகச் செய்து, அனைவரும் கேட்பதெல்லாம் கொடுக்கும் வள்ளன்மையைக் கைகொள்கிறான். இது சுயநலச் செய்கைதான் எனினும் இறுதியில் இறைவனின் (சங்கமர் வேடத்தில் இருக்கும் இறைவன்)

இச்சையைத் தீர்த்தல் என்ற நிலையை அடையும்போது சொற்பிழையாது காத்தல் வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கியிருப்பதை,

"வந்தவ ரெதுகேட்டாலும் வழங்குவது மெனப்ப தாகை

அந்தர மளாவ நாட்டி யளித்திடு நாளினின்று

சுந்தரசங்கமற்குச் சொன்மொழிப் பிறழா தென்னைப்

பந்தமாய்க் காப்பவட்கிப் பதியினைத்தருவே னென்றான்"

இப்பாடல் உணர்த்துகிறது (Kalyanasundaram, 2017). சொன்ன சொல்லை பிழையாமல் காப்பதற்காக தன் நாட்டையும், செங்கோலையும் தருவதோடு, சங்கமரின் இச்சையைப் பூர்த்தி செய்யும் கணிகைக்கு பணிசெய்தும் கிடப்பேன் என்றும் கூறுவது இதனை மெய்ப்பிக்கிறது.

சொல் திறம்பாமையே உயர்ந்த அறம் என்பதனை உணர்ந்ததாலேயே இறுதியில்,

"உலகினில் வருஞ்சுகத்து ளுயர்சுக யி.ஃதேயென்று

கலையணர் முனிவராருங் கழறுவராத லானத்

தலமதினுற்ற செய்யசங்கமர் விரகந் தீர்த்தால்

இலகுமென் னுயிர்கேட்டாலு மீகுவேன் வருவீர்மின்காள்"

என உயிரையும் கணிகையர்பால் ஒப்படைக்கத் துணிகின்றான் (Kalyanasundaram, 2017). இங்கு சொல்திறம்பாமையே உயர்ந்த அறம் என்பதாய் உருக்கொள்கிறது. ஔவையின் கூற்றில் நோக்க உயர்கற்பாக உருக்கொள்கிறது வல்லாளமகாராஜனின் செயல்பாடு.

கணிகையரின் சொல் திறம்பாமை

அருணாசல ஈஸ்வரனின் அருளினாலும், வல்லாளமகாராஜனின் சிறந்த ஆட்சி முறையினாலும் அங்கு வாழும் மக்கள் சொன்ன சொல்லைத் தவறாதவர்களாகவும், பிறருக்கு உதவும் பெருந்தன்மை உடையவர்களாவும் விளங்கினர். இதனால் அப்பகுதியில் வாழும் கணிகையரும் தங்கள் தொழிலில் நேர்மையுடையவர்களாக விளங்கினர். வல்லாளமகாராஜனை சோதிக்க எண்ணிய இறைவன் தம் சிவகணங்களை சங்கமர் உருவத்தில் கணிகையர் சேரிமுழுமைக்கும் ஒவ்வொருவர் இல்லத்திலும் தங்கச் செய்கிறார். அவர்கள் விடியுமளவும் கணியையுடன் காமநுகர்ச்சி அடையவும், அதற்காக ஒரு பெண்ணுக்கு ஆயிரம் பொன்னையும் அளித்து, அனைத்து கணிகையர் இல்லத்தினையும் நிரம்பச் செய்கிறார். தானும் சங்கமர் உருக்கொண்டு வல்லாளமகாராஜனின் அரண்மையை அடைந்து அரசனிடம் தன்னுடைய இன்ப நுகர்ச்சிக்கு ஒரு கணிகை வேண்டுமெனக் கேட்க அரசனும் ஒப்புக்கொள்கிறான்.

அரசன் தான் சொல்லியபடி நடக்க எண்ணி தன் காவலர்களை அழைத்து அழகிய இளமை பொருந்திய கணிகை ஒருத்தியை அழைத்துவரப் பணிக்கிறான். காவலர்கள் சென்று அழைக்க இன்று பொன்னைப்பெற்றுக் கொண்டு சங்கமர்களை மகிழ்விப்பதாக வாக்குக் கொடுத்துள்ளோம். நாளை வருகிறோம் என்றார்கள். கணிகையரின் மறுப்பினை உணர்ந்து வருந்தும் அரசனின் வருத்தம் தீர மந்திரிகள் சென்று அழைக்கின்றனர். அப்போதும் அவர்கள் வரமறுக்கின்றனர். இறுதியில் அரசனே அழைத்தபோதும் அவர்கள் பொன், பொருள், நாடு, அரசு என எதை அளிக்க முன்வந்தபோதும் மறுத்துவிடுகின்றனர். பொருளுக்காகத் தங்கள் உடலை பிறருக்கு நுகர்ச்சிக்கு அளிக்கும் தன்மையுடையவராயினும் சொன்ன சொல்லே உண்மையான அறமாகக்கொண்டு வாழ்ந்து வருவதை,

"ஆதர வாகத்தங்க ளாணையின் படியே யாங்கள்

ஏதுமிலடியார் தம்மோ டின்புறப் பொருளும் பெற்றோம்

நாதவென் செய்வோ மென்று நங்கையர் பணிந்துரைக்கப்

பூதல மன்னன் வெட்கிப் புகழ்மனைவந்து சார்ந்தான்"

என்ற வரிகள் உணர்த்துகின்றன (Kalyanasundaram, 2017). பொருளுக்காய் தன் உடலை விற்கும் தன்மையெனினும் சொல்பிழையாமையே உயர்ந்த அறம் என வாழும் கொள்கையினராய் இக்கணிகையர் இருப்பதைக் காணும்போது நின்ற சொற்திறமே கற்பாதலாய் மாறுவதை உய்த்துணரமுடிகிறது.

கணவனின் சொல்திறம்பாமையைக் காத்தல்

மனைவி என்பவள் தன்னையும், தன் குடும்பத்தையும் காத்துநிற்கும் வல்லாண்மை உடையவள். கணவனின் அனைத்து நிலைப்பாடுகளிலும் உடன்நின்று தக்க சமயத்தில் உதவும் சக்தியின் உருவாய் பெண் அமைகின்றாள். தன் கணவனின் கொள்கையே தன் கொள்கையென வாழும் பெண்களே உயர்ந்தோராய் மதிக்கப்பட்ட காலம் அக்காலம். அதனால்தான் தன் கணவன் சொன்ன சொல்லை நிறைவேற்ற இயலாமல் வருந்தும்போது கணவனின் சொல்லைக் காத்துநிற்றல் பொருட்டு சங்கமரின் இன்ப நுகர்ச்சிக்கு தானே செல்வதாய் மொழிகின்றாள். பெண் ஒழுக்கம் என்பது உடல் சார்ந்து அல்லாமல் கணவனின் சொல் திறம்பாமையை நிலைநிறுத்தும் பொருட்டுத் தானே கணிகையருக்கான நடத்தையை மேற்கொள்ளத் துணிகின்றாள். அப்போது,

"விரகமுற்ற வடியவர்க்கு வாக்களித்த வேந்தேநின்
மனம்யாதோ வறிகி லோம்யாம்
இருவர்களிற் சிறியவளா மென்னை யன்னோற்
கிசைந்திடவுங் கருத்துளதோ லிசைவேனென்றாள்
திருவளரு மன்னனக மகிழ்ந்து நோக்கிச்
சேயிழையே யடியவரோடரையிற் சேர்ந்து
உருவிலியாற் படுந்துயர மொழிப்பா யென்று
உத்தமனும் பெரியவருக் குரைத்திட் டானால்"

என சல்லம்மாதேவியின் கூற்று சொற்பிழையாமை என்பதே முதன்மையாக இருக்கிறதே அன்றி இன்றைய கற்பு என்னும் நிலைப்பாட்டை அங்கு பார்க்க இயலவில்லை (கலியாணசுந்தரனார், 2017). ஒருவனுக்கு ஒருத்தி என்றும், இன்றைய கற்புக்கான உடல் வரையறைகள் என்ற நிலைப்பாட்டைத் தாண்டியும் சொல் திறம்பாமையே கற்பாக உருவெடுப்பதனை சல்லம்மாதேவியின் மொழிகள் வழி உணர்கிறோம்.

முடிவுரை

சொல் திறம்பாமை என்னும் உயரிய நிலைப்பாடு கற்பாகப் போற்றப்பட்ட நிலையினை சங்ககாலம் தொடங்கி, பிற்கால நீதி இலக்கிய காலம் வரையிலும் நாம் காணமுடிகிறது. பிற்காலத்தில் உடல்சார்ந்த விழுமியமாக அது மாறிவிட்ட போதும் உண்மையில் இன்றும் உலக வழக்கில் இப்பொருண்மை உண்டென்பதை உணரமுடிகிறது. தாய்வழிச் சமூகத்தின் எச்சமாக பெண் இருந்த காலம் வரையிலும் சொல் திறம்பாமையே அறமாக அமைந்திருந்தது என்பதை சேரநாட்டுப் பகுதியில் வாழும் மக்களின் செயல்பாடுகள் நிறுவியிருக்கின்றன. தன் சொன்ன சொல்லை தவறியதற்காக நீதிமன்றத்தின் முன் தன்னை மாய்த்துக்கொண்ட பெண்ணை செய்தித்தாள்கள் வழி அறியமுடிகிறது. சேரநாட்டுப் பகுதியில் இன்றும் சில சாதியினரிடத்து இப்பொருளிலேயே கற்பு என்னும் நிலைப்பாட்டைக் காணமுடிகிறது. வல்லாளமகாராஜன் கதையில் சல்லம்மாதேவியையும் அத்தகையதொரு கற்பு நிலைப்பாட்டுடனேயே காணயியலுகிறது.

References

Avvaiyar, (2017) Kondrai Vendhan, Gowra pathippagam, Salem, India.

Jeyabal, Ra., (2004), Aganannooru, New Century Book House, Chennai, India.

Jeyamohan, B., (2012) Karpu enbathu, Available at: https://www.jeyamohan.in/35556/

Kalyanasundaram, T, V., (2017) Arunachala puranam, Amaravathi Publications, Chennai, India.

Nachinarkiniyar, (1970), Tholkappiyam Porulathikaram Urai, Kalaga Veliyedu, Chennai, India.

Nagarajan, V., (2004), Kuruntokai, New Century Book House, Chennai, India.

Rathanakumar, Su., (2014), Kanchipuram Saiva Siddhanta, thathuvamayam, Tamil university, Thanjavur, India.

Thirugnanasambandar, (2011), The Devaram Panniru Thirumurai Research Centre, Karpagam university, Coimbatore, India.

Funding: No funding was received for conducting this study.

Conflict of Interest: The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License